நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## பாமாயில் சாகுபடி விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்யலாம்

First Published : 17 Jul 2011 10:45:27 AM IST

பெரம்பலூர், ஜூலை 16: பெரம்பலூர் மாவட்டத்தில் பாமாயில் சாகுபடி செய்யும் விவசாயிகள், பாமாயில் மரத்துக்கு வானிலைக் காப்பீடு திட்டத்தின் கீழ், புதிய காப்பீடு செய்யலாம் என்றார் அக்ரிக்கல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா நிறுவனத்தின் மண்டல மேலாளர் அன்பரசு.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மத்திய, மாநில அரசின் வானிலைப் பயிர்க் காப்பீடு திட்டத்தின் கீழ், பாமாயில் மரத்துக்கு 50 சத மானியத்துடனான காப்பீடு திட்டத்தை அக்ரிக்கல்சர் கம்பெனி ஆப் இந்தியா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், வரையறுக்கப்பட்டுள்ள வட்டாரத்தில் பொழியும் மழையின் அளவைக் கொண்டும், குறைந்தளவு மழை, தொடர் மழை மற்றும் கூடுதல் மழை உள்ளிட்ட காரணங்களைக் கொண்டும், திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உள்பட்டு நஷ்ட ஈடு வழங்கப்படும்.

மழை அளவைக் கண்காணிக்க ஒவ்வொரு வட்டாரத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், அரசு சார்ந்த மழை மானியின் மூலம் ஜூலை 15-ம் தேதி முதல் நவம்பர் மாதம் வரை மழையின் அளவைக் கண்காணித்து திட்டத்தின் விதிகளின்படி நஷ்டஈடு வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தில் சேர, பாமாயில் மரம் 1 முதல் 7 வயதுடையதாக இருந்தால், ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் மதிப்புக்கு 50 சத அரசு மானியம் போக செலுத்த வேண்டிய பிரிமியம் தொகை ரூ 600.

7 வயதுக்கு மேல் உள்ள மரங்களுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் மதிப்புக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமீயம் தொகை ரூ. 1500. அரசு மானியம் போக சேவை வரி கிடையாது. பாமாயில் மரத்துக்கு பிரிமியம் தொகை செலுத்த வேண்டிய கடைசி நாள் ஜூலை 25-ம் தேதியாகும்.

எனவே, பாமாயில் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறையை அணுகலாம்.

இதுதொடர்பான விவரங்களுக்கு காவேரி பாமாயில் நிறுவனத்தையும் அணுகலாம் என்றார் அவர்.

**பயிர் விளைச்சல் போட்டி: விவசாயிகளுக்கு பரிசு**

First Published : 17 Jul 2011 11:48:24 AM IST

திருநெல்வேலி, ஜூலை 16:÷திருநெல்வேலி மாவட்ட அளவில் நடைபெற்ற பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் பரிசுகளை வழங்கினார்.

÷பயிர்சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து விவசாயத்தில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் வேளாண்மைத் துறை சார்பில் மாவட்ட மற்றும் மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

÷திருநெல்வேலி மாவட்டத்தில் 2010-2011-ம் ஆண்டு சோளம் இறவைப் பயிரில் மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்பட்டது.

÷இதில் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

÷கடையநல்லூர் வட்டம், காசிதர்மம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி மு. கதிரேசன் "அமர்நாத்-151' ரக சோளப் பயிரில் ஹெக்டேருக்கு 13,150 கிலோ மகசூல் பெற்று முதல்பரிசைப் பெற்றார்.

÷இதே கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கு. கோமதிநாயகம் "அமர்நாத்-151' ரக சோளப் பயிரில் ஹெக்டேருக்கு 11,600 கிலோ மகசூல் பெற்று மாவட்ட அளவில் இரண்டாம் பரிசைப் பெற்றார்.

÷திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், முதல் பரிசு பெற்ற விவசாயி கதிரேசனுக்கு ரூ. 10 ஆயிரம், இரண்டாம் பரிசு பெற்ற விவசாயி கோமதிநாயகத்துக்கு ரூ. 5 ஆயிரம் பரிசுத் தொகையை மாவட்ட ஆட்சியர் எஸ். நடராஜன் வழங்கினார்.

÷விதை சுத்திகரிப்பு நிலையத்துக்கு மானியம்:

÷இதேபோல விவசாயிகள் மற்றும் வேளாண் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் விதை சுத்திகரிப்பு பணி செய்வதை ஊக்குவிக்கும் வகையில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 50 சதவிகித மானியத்தில் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு நிதியுதவி அளிக்கிறது.

÷இத்திட்டத்தில் பேட்டையைச் சேர்ந்த விவசாயி எஸ். மீனாட்சிசுந்தரத்துக்கு திட்ட மதிப்பீடான 18.74 லட்சத்தில், அரசு மானியமாக ரூ. 7.16 லட்சத்தை மாவட்ட ஆட்சியர் எஸ். நடராஜன் வழங்கினார்.

÷நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ. ரமண சரஸ்வதி, வேளாண்மை இணை இயக்குநர் சா. தேவசகாயம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

÷தோட்டக்கலையில் மானியம்:

தேசிய தோட்டக்கலை இயக்ககம் சார்பில், தேர்வு செய்யப்பட்ட 5 விவசாயிகளுக்கும் மானியத்தொகை வழங்கப்பட்டது.

÷திப்பனம்பட்டியைச் சேர்ந்த சந்திரசேகர், தாழையூத்தைச் சேர்ந்த மு. ஷாகுல் அமீது, ஆலங்குலத்தைச் சேர்ந்த எஸ். தெய்வானை ஆகியோருக்கு ரூ. 5 ஆயிரம் மானியத்தொகை வழங்கப்பட்டது.
÷மேலும் பத்தமடையைச் சேர்ந்த வி. காந்தி, ஏமன்குளத்தைச் சேர்ந்த எம். தர்மராஜ் ஆகியோருக்கு ரூ. 13,983 மதிப்பிலான இடுபொருள் மானியம் வழங்கப்பட்டது.

**நீர்மட்டம்**

First Published : 17 Jul 2011 11:39:47 AM IST

பாபநாசம் 48.00 அடி 143.00 அடி
சேர்வலாறு 67.91 அடி 156.00 அடி
மணிமுத்தாறு 54.90 அடி 118.00 அடி
கடனாநதி 51.30 அடி 85.00 அடி
ராமநதி 46.00 அடி 84.00 அடி
கருப்பாநதி 47.80 அடி 72.00 அடி அடவிநயினார் 67.00 அடி 132.00 அடி
பேச்சிப்பாறை 38.15 அடி 48.00 அடி
பெருஞ்சாணி 50.50 அடி 77.00 அடி
சிற்றாறு 1 9.48 அடி 18.00 அடி
சிற்றாறு 2 9.57 அடி 18.00 அடி
முக்கடல் 0.05 அடி 25.00 அடி
பொய்கை 17.60 அடி 42.45 அடி

**மேட்டூர் அணை: 84.38 அடி**

First Published : 17 Jul 2011 10:25:19 AM IST

தஞ்சாவூர், ஜூலை 16: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 84.38 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 5,158 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 13,000 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து காவிரியில் வினாடிக்கு 1,000 கன அடி, வெண்ணாற்றில் வினாடிக்கு 6,001 கன அடி, கல்லணைக் கால்வாயில் வினாடிக்கு 2,017 கன அடி, கொள்ளிடத்தில் வினாடிக்கு 860 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**நவீன வேளாண் கருவிகளை வாடகைக்குவிட அரசு திட்டம்**

வி.என். ராகவன்

First Published : 17 Jul 2011 10:11:17 AM IST

திருச்சி, ஜூலை 16: தமிழகத்தில் சிறு, குறு விவசாயிகளின் வருவாயைப் பெருக்குவதற்காக நவீன வேளாண் கருவிகளை இருப்பு வைத்து, விவசாயிகளுக்கு வாடகைக்குவிட அரசு திட்டமிட்டு வருகிறது.

வேளாண்மைத் தொழிலில் கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறை பெரும் பிரச்னையாக இருந்து வருகிறது. இதனால், விவசாயிகள் பலர் வேளாண் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த பிரச்னையை தவிர்ப்பதற்காக அனைத்து மாவட்டங்களிலும் சிறு, குறு விவசாயிகள் குறித்த கணக்கெடுப்புப் பணியை வேளாண் துறை அலுவலர்கள் மேற்கொண்டுள்ளனர். இந்தப் பணி ஜூலை மாத இறுதியில் நிறைவடையும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கணக்கெடுப்பில் நில அளவை எண், விவசாயியின் பெயர், அவரது தந்தை பெயர், வங்கிக் கணக்கு விவரம், கைப்பேசி எண், இப்போது சாகுபடி செய்யப்படும் பயிர்கள் விவரம், அதற்கான நீராதாரம், மண் பரிசோதனை செய்யப்பட்டதா? கடந்த 3 ஆண்டுகளில் பெறப்பட்ட சராசரி வருவாய், என்னென்ன விவசாயக் கருவிகள் இருக்கின்றன? (பவர் டில்லர், டிராக்டர், களையெடுப்புக் கருவி), வேளாண் சார்ந்த தொழில்கள் மூலம் கிடைக்கும் வருமானம் (ஆடு, மாடு, கோழி வளர்ப்பு), தேவைப்படும் பயிர்க் காப்பீடு, பயிர்க் கடன் போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

மேலும், இந்தத் திட்டத்தில் உயரிய தொழில்நுட்பங்கள் மூலம் சிறு, குறு விவசாயிகளின் வருவாயை இரு மடங்காக உயர்த்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

எனவே, இதுவரை மேற்கொள்ளப்பட்ட சாகுபடியில் எதனால் மகசூல் குறைந்தது? மகசூலை இரு மடங்காக உயர்த்த என்னென்ன தொழில்நுட்பங்கள் தேவைப்படுகின்றன போன்ற தகவல்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

மகசூலை அதிகப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட பகுதிகளில் திருந்திய நெல் சாகுபடி முறை, நுண்ணீர் பாசனம், சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம், மழை தூவிப் பாசனம் போன்றவற்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த பருவத்துக்கு என்ன சாகுபடி மேற்கொள்வது என்பது குறித்த அறிவுரைகளை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான விதைகள், உயிரி உரங்கள், நுண் சத்துகள், உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாக மருந்துகள் போன்றவற்றை பரிந்துரைப்பது தொடர்பாகவும் கணக்கெடுக்கப்படுகின்றன.

விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் கிராமங்களுக்குத் தேவையான நவீன இயந்திரங்கள், நெல் நடவுக் கருவிகள், பவர் கோனோவீடர், பவர் டில்லர், டிராக்டர், ஒருங்கிணைந்த அறுவடைக் கருவிகள் போன்ற தேவைகளும் அறியப்பட்டு வருகின்றன.

இந்த விவரங்கள் அனைத்தும் கையடக்க டிஜிட்டல் கருவி மூலம் பதிவு செய்யப்படவுள்ளன. இந்தப் பதிவுகள் தனியாகச் சேமித்து நிர்வகிக்கப்படவுள்ளன.

இந்தக் கருவிகளை அந்தந்தப் பகுதிகளில் இருப்பு வைத்து கிராம விவசாயிகளுக்கு வாடகைக்குவிட அரசு திட்டமிட்டு வருகிறது.

நவீன வேளாண் கருவிகளை விவசாய ஆர்வலர் குழுக்கள், டான்வாப் மகளிர் குழுக்கள், பயிர் மருந்தகம் உள்ளிட்டவற்றுக்கு வழங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு விடலாமா அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கம் மூலம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாமா என்பது குறித்தும் அரசு ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மொத்த சிறு, குறு விவசாயிகளை மூன்றாகப் பிரித்து, தொடர்ந்து 3 ஆண்டுகளில் ஒவ்வொரு பிரிவினருக்கும் இந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதாம். இந்தத் திட்டம் அடுத்த 3 ஆண்டுகளில் அனைத்து சிறு, குறு விவசாயிகளையும் சென்றடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வேளாண் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திருச்சியில்...: திருச்சி மாவட்டத்தில் இந்தக் கணக்கெடுப்புப் பணியில் வேளாண் துறை இணை இயக்குநர் ஜே. சேகர் தலைமையில், துணை இயக்குநர் ஆர். சந்திரசேகரன், எஸ். சபா நடேசன் மேற்பார்வையில் 9 உதவி இயக்குநர்கள், 16 வேளாண் அலுவலர்கள், 14 துணை வேளாண் அலுவலர்கள், 86 உதவி வேளாண் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

திருச்சி மாவட்டத்தில் 94,024 சிறு விவசாயிகளும்,99,290 குறு விவசாயிகளும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**காங்கயம் வட்டாரத்தில் சிறு, குறு விவசாயிகள் கணக்கெடுப்பு**

First Published : 17 Jul 2011 09:42:06 AM IST

காங்கயம், ஜூலை 16: காங்கயம் வட்டாரத்தில் சிறு, குறு விவசாயிகள் குறித்த கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது.

காங்கயம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ஆர்.மாணிக்கம் வெளியிட்டுள்ள செய்தி:

திருப்பூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் எஸ்.முத்துசாமி அறிவுரைபடி, வேளாண் தொழிலில் ஈடுபட்டு வரும் சிறு, குறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக

அடிப்படை புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் பணி காங்கயம் வட்டாரத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், உதவி வேளாண் அலுவலர்களால் பங்கேற்றுள்ளனர். எனவே, சிறு, குறு விவசாயிகள், தாங்கள் சிறு, குறு விவசாயி என்பதற்கான ஆவணங்களுடன், தங்கள் பகுதிக்கு வரும் உதவி வேளாண் அலுவலரைச் சந்தித்து, உரிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

**வேளாண் விற்பனைத் துறை ஆணையர் ஆய்வு**

First Published : 17 Jul 2011 08:46:20 AM IST

கடலூர், ஜூலை 16: சேவைகளை மேம்படுத்துவது தொடர்பாக கடலூர் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்
கூடங்களை தமிழ்நாடு வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை ஆணையர் தங்க கலியபெருமாள் சனிக்கிழமை ஆய்வு செய்தார்.

தங்க கலியபெருமாள் கடலூர், பண்ருட்டி, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள், அண்மையில் தொடங்கப்பட்ட பண்ருட்டி ஊரக வணிக மையம், கடலூர் திருப்பாப்புலியூர் உழவர் சந்தை ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

÷ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் சேவையை மேம்படுத்துவது குறித்து, ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். ÷ஆணையருடன் மாவட்ட மார்க்கெட் கமிட்டி செயலாளர் அருள்பிரகாசம், இணை இயக்குநர் மணி, துணை இயக்குநர் தனவேல், கடலூர் முதுநகர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் தீனதயாளன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடி பயிற்சி**

First Published : 17 Jul 2011 10:03:38 AM IST

அரியலூர், ஜூலை 16: அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடி குறித்த பயிற்சி சோழமாதேவி கிராமத்தில் உள்ள கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் அண்மையில் நடைபெற்றது.

தா.பழூர் பகுதி வேளாண் துறை, விருத்தாச்சலம் வேளாண் அறிவியல் மையம் ஆகியவை இணைந்து தேசிய வளர்ச்சித் திட்ட துல்லியப் பண்ணையத் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சியை வழங்கின.

தா.பழூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ராஜாங்கம் பயிற்சி முகாமுக்குத் தலைமை வகித்தார். விருத்தாச்சலம் வேளாண் அறிவியல் மைய உதவிப் பேராசிரியர் ராஜு, கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

கிரீடு வேளாண் அறிவியல் மையத் தொழில்நுட்ப வல்லுநர்கள் ராஜாஜோஷ்வின், ராஜகலா ஆகியோரும் கரும்பு சாகுபடி குறித்துப் பேசினர்.

கோடாலிக்கருப்பூர் உழவர் மன்றத் தலைவர் நடராஜன், தா.பழூர் வட்டாரத்தைச் சேர்ந்த சோழமாதேவி, அணைக்குடம்,கோடாலிக்கருப்பூர், தா. பழூர் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சி முகாமில் பங்கேற்றனர்.

வேளாண் உதவி அலுவலர்கள் சிவக்குமார், செந்தில்குமார், கலையரசன், ராஜா ஆகியோர் முகாமுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

**திருச்செந்தூர் கோட்டத்தில் விவசாயத்துக்கு புதிய மின் இணைப்பு**

First Published : 17 Jul 2011 11:37:41 AM IST

திருச்செந்தூர், ஜூலை 16: திருச்செந்தூர் கோட்டத்தில் புதிய விவசாய மின் இணைப்புக்கு பதிவு செய்யுமாறு விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து திருச்செந்தூர் மின் விநியோகச் செயற்பொறியாளர் (பொறுப்பு) கு.ஜெயப்பிரகாசம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருச்செந்தூர் கோட்டத்தில் விவசாய மின் இணைப்பு வேண்டி 31.3.2000 அன்று வரை பதிவு செய்த விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பு வழங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இதனால் 2 லட்சம் விவசாய சிறப்பு முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் தயார் நிலை பதிவு செய்ய 2.11.2010 அன்று அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது.

இவர்களில் 30.6.2011 வரை பதிவு செய்தவர்களுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 30.6.2011-க்குள் தயார் நிலை பதிவு செய்யாத விண்ணப்பதாரர்கள் முதல் அறிவிப்புக் கடிதம் முடிவு பெற்ற நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள்ளாக கால நீட்டிப்பு அனுமதி பெற்று சாதாரண வரிசை திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற்றுக் கொள்ளலாம்.

தவறும் பட்சத்தில் விண்ணப்பம் ரத்து செய்யப்படும் என்று தலைமையகத்திலிருந்து ஆணை பெறப்பட்டுள்ளது. எனவே இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பயனடையுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தினமலர்

## நடப்பு 2011ம் ஆண்டு ஜூன் மாதத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி அதிகரிப்பு

ஜூலை 18,2011,02:42



மும்பை:சென்ற ஜூன் மாதத்தில், இந்தியாவின் தாவர எண்ணெய் இறக்குமதி 17.8 சதவீதம் அதிகரித்து 8 லட்சத்து 62 ஆயிரத்து 550 டன்னாக உயர்ந்துள்ளது. சென்ற 2010ம் ஆண்டு, இதே மாதத்தில், தாவர எண்ணெய் இறக்குமதி 7 லட்சத்து 32ஆயிரத்து 232 டன் என்ற அளவில் இருந்தது.இது குறித்து, எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் (எஸ்.ஈ.ஏ) வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில், உள்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி குறைந்துள்ளதால், தாவர எண்ணெய் இறக்குமதி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எண்ணெய் பருவம் என்பது நவம்பர் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான காலமாகும். இதில், நவம்பர் - ஏப்ரல் வரையிலான முதல் ஆறு மாதங்களில், உள்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகளவில் இருக்கும். அதனால், உள்நாட்டு தேவையை ஈடு செய்யும் விதத்தில், தாவர எண்ணெய் உற்பத்தியும் அதிகரித்து காணப்படும். இத்தகையபோக்கால், இந்த அரையாண்டு காலத்தில் நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி குறைவாகவே இருப்பது வழக்கம்.ஆனால்,மே - அக்டோபர் வரையிலான இரண்டாவது அரையாண்டு பருவத்தில், உள்நாட்டில் தாவர எண்ணெய் உற்பத்தி குறையும் என்பதால், அதன் இறக்குமதி அதிகரிக்கும்.இதன்படி, சென்றமே-ஜூன் ஆகிய இரண்டு மாதங்களில், நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி அதிகரித்துள்ளது. இது, நடப்பு எண்ணெய் பருவம் முழுவதும் தொடரும் என்று எஸ்.ஈ.ஏ அமைப்பு மதிப்பிட்டுள்ளது.நடப்பு ஜூலை மாதம் 1ம்தேதி நிலவரப்படி, நாட்டின் பல்வேறு துறைமுகங்களில் 6 லட்சம் டன் அளவிற்கு சமையல் எண்ணெய் இருப்பு உள்ளது. இதில், கச்சா பாமாயில் 4 லட்சம் டன் சுத்திகரிக்கப்பட்ட ஆர்.பி.டி பாமாயில் 65 ஆயிரம் டன், சுத்திகரிக்கப்பட்ட சோயாபீன் எண்ணெய் 80ஆயிரம் டன், கச்சா ‹சூரியகாந்தி எண்ணெய் 55ஆயிரம் டன் என்ற அளவிலும் உள்ளன. மேலும், எண்ணெய் குழாய்களில் 90 லட்சம் டன் சமையல் எண்ணெய் இருப்பு உள்ளது. துறைமுகங்கள் மற்றும் எண்ணெய் குழாய்களில் உள்ள சமையல் எண்ணெய் இருப்பின் அளவு 1 லட்சத்து 55ஆயிரம் டன் உயர்ந்து, 15 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற ஜூன் மாதம், 13 லட்சத்து 45 ஆயிரம் டன்னாக இருந்தது.சென்ற

ஆண்டு நவம்பர் முதல், நடப்பாண்டு ஜூன் மாதம் வரையிலான 8 மாத காலத்தில், சமையல் எண்ணெய் இறக்குமதி 51 லட்சத்து 30ஆயிரத்து 224 டன் என்ற அளவில் உள்ளது. முந்தைய 2009 - 10ம் ஆண்டு, இதே காலத்தில் இது, 55 லட்சத்து 81ஆயிரத்து 670 டன்னாக அதிகரித்து காணப்பட்டது.இதே காலத்தில், ஆர்.பீ.டீ பாமாயில் இறக்குமதி 18 சதவீதம் குறைந்து, 6 லட்சத்து 38ஆயிரத்து 715 டன்னாக சரிவடைந்துள்ளது. இதில், "த்திகரிக்கப்பட்ட எண்ணெயின் பங்களிப்பு 13 சதவீதமாகவும், சுத்திகரிக்கப்படாத கச்சா எண்ணெயின் பங்களிப்பு 87 சதவீதம் என்ற அளவிலும் உள்ளது.இதே காலத்தில் பாமாயில் இறக்குமதி, 39 லட்சத்து 59 ஆயிரத்து 300 டன்னாக குறைந்துள்ளது. சென்ற ஆண்டின் இதே காலத்தில், இது 39 லட்சத்து 98ஆயிரத்து 728 டன் என்ற அளவில் உயர்ந்து காணப்பட்டது. இதே காலத்தில், சரும,கேச பாதுகாப்பு எண்ணெய் இறக்குமதி, 13 லட்சத்து 23ஆயிரத்து 83 டன்னில் இருந்து, 9 லட்சத்து 88 ஆயிரத்து 211 டன்னாக குறைந்துள்ளது.

**வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி பாதிப்பு**

ஜூலை 18,2011,08:49



வெளிநாடுகளுக்கான முட்டை ஏற்றுமதி, மூன்றாண்டுகளில் பாதியாக குறைந்துள்ளது. இந்திய முட்டை விலையைக் காட்டிலும், மற்ற நாடுகள் முட்டைக்கான விலையை குறைத்து வழங்குவது, ஏற்றுமதி சரிவுக்கு முக்கிய காரணம் என, கோழிப்பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். முட்டை ஏற்றுமதி சரிவு எதிரொலியாக, அன்னியச் செலாவணி மூலம் அரசுக்கு கிடைத்து வந்த வருவாய் குறையும். நாமக்கல் மண்டலத்துக்கு உட்பட்ட பகுதியில், 800க்கும் அதிகமான கோழிப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அதன்மூலம் நாள்தோறும், 3 கோடி முட்டைகள் வீதம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் முட்டைகளில் நாள்தோறும், 70 லட்சம் சத்துணவு திட்டத்திற்கும், 70 லட்சம் கேரளாவுக்கும், 70 லட்சம் முட்டைகள் ஐக்கிய அரபு எமிரேட், ஐரோப்பா மற்றும் ஆப்ரிக்கா கண்டத்தில் உள்ள நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. மீதமுள்ள முட்டைகள், உள்ளூர் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. இந்தாண்டு, மே மாதம் சராசரியாக முட்டை விலை, 226 காசுகள் வீதம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடந்த, 2010 மே மாதம், 260 காசுகள் வீதம் முட்டை விற்பனை செய்யப்பட்டுள்ளது. 24 காசுகள் வீதம், முட்டை விலையில் ஏற்பட்டுள்ள சரிவுக்கு, நுகர்வு குறைவு உள்ளிட்ட காரணங்களை

பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக, வெளிநாடு ஏற்றுமதி வெகுவாக குறைந்திருப்பதும், முட்டை விலை சரிவுக்குக் காரணம் என கூறப்படுகிறது. அதன்படி, 2008 மே மாதம், 7 கோடியே 79 லட்சம் முட்டைகள் வீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 2011 மே மாதம், முட்டை ஏற்றுமதி பாதியாக குறைந்துள்ளது. ஒவ்வொரு மாதமும் முட்டை ஏற்றுமதி வெகுவாக குறைந்து வருகிறது. ஐக்கிய அரபு எமிரேட், ஐரோப்பா, ஆப்ரிக்கா ஆகிய நாடுகள், இந்தியாவில் இருந்து முட்டையை இறக்குமதி செய்கின்றன. அந்த நாடுகளுக்கு, ஹாலந்து உள்ளிட்ட நாடுகள், இந்திய முட்டை விலையைக் காட்டிலும் குறைத்து வழங்குகின்றன. இது குறித்து, ஏற்றுமதி நிறுவனத்துக்கு முட்டை வழங்கும் கோழிப்பண்ணையாளர்கள் சிலர் கூறியதாவது: நாமக்கல் பகுதியிலிருந்து, நாளொன்றுக்கு, 50 லட்சம் முட்டை வீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. அதன்படி, நாள்தோறும் பத்து கன்டெய்னர்களில் முட்டைகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. தற்போது, முட்டை ஏற்றுமதி ஒரு கன்டெய்னராக குறைந்துள்ளது. ஹாலந்து மற்றும் அமெரிக்க நாடுகள் சில, முட்டை விலையை குறைத்து ஏற்றுமதி செய்கின்றன. குறிப்பாக, இந்திய முட்டை விலையைக் காட்டிலும், குறைத்து வழங்குகின்றன. அதனால், இந்திய முட்டை ஏற்றுமதி வெகுவாக குறைந்துள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**சர்க்கரை உற்பத்தி 2.45 கோடி டன்னாக உயர்வு**

ஜூலை 18,2011,02:38



புதுடில்லி:நடப்பு 2010-11ம் ஆண்டு சர்க்கரைபருவத்தில் இது வரையிலுமாக, நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.45 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. கரும்பு பயிரிடும் முக்கிய பகுதிகளில் விளைச்சல் அதிகமானதை தொடர்ந்து சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளது.நடப்பு ஜூலை மாதம் 13ம் தேதி வரையில், 2.45 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என சர்க்கரை ஆலைகள் தெரிவித்துள்ளன. வரும் காலத்தில், சர்க்கரை உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக, மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் தெரிவித்தார்.நாட்டின் சர்க்கரை உற்பத்தி, நடப்பு சர்க்கரை பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), 2.42 கோடி டன்னாக இருக்கும் என, முன்பு மதிப்பீடு செய்யப் பட்டிருந்தது. இந்நிலையில், முன் கூட்டியே, சர்க்கரை உற்பத்தி, அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச அளவில், சர்க்கரை உற்பத்தியில்

இந்தியா இரண்டாவது இடம் வகிக்கிறது. மேலும், சர்க்கரை பயன்பாட்டில் முதலிடத் தில் உள்ளது. சர்க்கரைக்கான தேவை, இரண்டாண்டு கால இடைவெளியில், 2.10 - 2.15 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, கடந்த வருடம் 1.90 கோடி டன்னாக இருந்தது.

**உலகளவில் ஏலக்காய், கிராம்புக்கு தேவை கூடியது:கிலோ 350 ரூபாய் வரை உயர்ந்தது**

ஜூலை 18,2011,02:40



ஈரோடு:வாசனைப் பொருள்கள் விளைச்சல், 10 சதவீதம் அதிகரித்தாலும், உலகளவிலான தேவை அதிகரிப்பால், கிலோ வுக்கு, 200 முதல், 350 ரூபாய் வரை அவற்றின் விலை உயர்ந்துள்ளது.உலகளவில் வாசனைப் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. இந்தியாவுக்கு பிறகே, இலங்கை, வியட்நாம், இந்தோனேஷியா ஆகிய நாடுகள் உள்ளன. இந்தியாவில்,கேரளா, தமிழகம், கர்நாடகா உள்ளிட்ட சில மாநிலங்க ளிலேயே வாசனைப் பொருள் கள் உற்பத்தியாகின்றன. ஏலக்காய், கிராம்பு, மிளகு, லவங்கம், பட்டை, கல்பாசி, மரப்பாசி, மராட்டி முக்கு ஆகிய வாசனை பொருள்கள் இந்தியாவில் அதிகம் விளைகின்றன. சென்றாண்டு இந்தியாவை விட, மற்ற நாடுகளில் வாசனைப் பொருள்கள் உற்பத்தி குறைவாகவே இருந்தது. ஆனால், இந்தியாவில் விளைச்சல், 10 சதவீதம் உயர்ந்தது. உலகளவிலான தேவை அதிகரித்த நிலையில், இந்திய வாசனைப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைத்தது.மே மாதம் ஒரு கிலோ ஏலக்காய், 750 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ரம்ஜான், பொங்கல் பண்டிகைக் காலங்களில் தேவை அதிகரித்ததால், 2,100 ரூபாய் வரை விலை அதிகரித்தது. பிப்ரவரியில் விளைச்சல் அதிகரித்ததால், ஏலக்காய் விலை, 750 ரூபாயாக மீண்டும் குறைந்தது. இதே நிலை ஓரிரு மாதங்கள் மட்டுமே நீடித்தது. மீண்டும் ஏலக்காய் விலை உயர்ந்து, ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மேலும் விலை உயர வாய்ப்புள்ளது என, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். கிராம்பு, 350 ரூபாயில் இருந்து, 500 ரூபாயாக உயர்ந்துள்ளது.

ஈரோடு மொத்த வியாபாரிகள் தெரிவித்ததாவது:இந்தியாவில், மேற்கு தொடர்ச்சி மலையின் தென்பகுதியான கேரளா, தமிழகத்தில் தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில்தான் வாசனைப் பொருள்கள் அதிகம் விளைகிறது. இங்கிருந்து, இதர நாடுகளுக்கும், பிற மாநிலங்களுக்கும் வாசனைப் பொருள்கள் அனுப்பப்படுகின்றன. சென்றாண்டு விளைச்சல் குறைவு, தேவை அதிகம் போன்ற

காரணங்களால், விலையும் அதிகரித்தது.இன்றைய மார்க்கெட் நிலவரப்படி, ஏலக்காய் ஒரு கிலோ, 750 ரூபாயில் இருந்து, 1,000 ரூபாய், கிராம்பு, 350 ரூபாயில் இருந்து, 750 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அடுத்து தசரா, தீபாவளி பண்டிகை காலம் துவங்க இருப்பதால், ஏலக்காய் கிலோ, 2,000 ரூபாய் வரை விலை உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2011,01:21 IST

தர்மபுரி: தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ், நெல் பயிர் காப்பீடு செய்ய தர்மபுரி மாவட்ட விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், வங்கிகள் மற்றும் வேளாண்மை துறை சார்பில் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ், பயன்பெறும் கடன் அல்லாத விவசாயிகளுக்கு பதிவு செய்யும் வகையில் படிவங்கள் விநியோகிக்கப்படுகிறது. தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ், குறுவை நெல் பயிரில் பெறப்படும் மகசூல் வருவாய் கிராம அளவிலான உத்தரவாத மகசூலுடன் குறையும் போது விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதனால், பயிர் காப்பீடு செய்யப்பட்டால் உத்தரவாத மகசூல் பெறதாபோது, காப்பீடு பலன்கள் விவசாயிகளுக்கு கைகொடுக்கிறது. தமிழகத்தில் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, 15 லட்சம் விவசாயிகள் இதுவரை 171 கோடி ரூபாய் பிரிமியம் செலுத்தியுள்ளனர். ஆனால், இவர்களுக்கு மகசூல் நஷ்டம் ஏற்பட்டது தொடர்பாக வேளாண் துறை இதுவரை, 1,241 கோடி ரூபாய் நஷ்டஈடு செலுத்தியுள்ளது. நெல் குறுவை பயிருக்கு மத்திய, மாநில அரசின் 50 சதம் மற்றும் 55 சதம் மானியம் போக கடன் பெறுவதற்கு சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு 153 ரூபாய் பிரிமீயம் செலுத்திவருகின்றனர். இதன் மதிப்பு 13,556 ரூபாய். விவசாயிகள் விருப்பத்தின் பேரில் கூடுதல் பிரிமீயமாக, 132 ரூபாய் செலுத்தினால், 9 ஆயிரத்து 36 ரூபாய் கூடுதல் காப்பீடு வழங்கப்படுகிறது. கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் மொத்த பிரிமீயம் ஏக்கருக்கு, 286 ரூபாய் செலுத்தினால், இதன் மதிப்பு 22 ஆயிரத்து 592 வழங்கப்படுகிறது. பயிர் கடன் பெறாத ஏனைய விவசாயிகள், 169 ரூபாய் பிரிமீயம் செலுத்த வேண்டும். தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ், உரிம பிரிமீயம் செலுத்தி பதிவு செய்ய கோரி தர்மபுரி கலெக்டர் லில்லி கடந்த 14 தெரிவித்திருந்ததையடுத்து, மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் தினசரி விவசாயிகள் தங்கள் சிட்டா அடங்கல் மற்றும் சிறு, குறு விவசாயிகளுக்கான ஆவணங்களுடன் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து அளித்துவருகின்றனர்.

**தீவன அபிவிருத்தி குறித்த விழிப்புணர்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜுலை 18,2011,01:10 IST

ஆத்தூர்: ஆத்தூர், கல்வராயன்மலை வனப்பகுதிக்கு வெளியே மேய்ச்சல் நிலம் மேம்படுத்துதல் மற்றும் தீவன அபிவிருத்தி பணிகள் குறித்து, வனத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் விழிப்புணர்வு கலந்தாய்வு கூட்டம் நடந்தது. ஆத்தூர் அருகே பனைமடல் வன அலுவலகத்தில், கால்நடைத்துறை மற்றும் வனத்துறை சார்பில், கால்நடை மேய்ச்சல் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு கலந்தாய்வு கூட்டம் நடந்தது. கூட்டத்தில்,"கால்நடை மேம்பாட்டுக்காக, வனப்பகுதிக்கு வெளியே மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்துதல் மற்றும் தீவிர தீவன உற்பத்தி அதிகரிப்பு செய்ய வேண்டும். சேலம் மாவட்ட அளவில் உள்ள கிராம வனக்குழுக்கள் மற்றும் வனப்பகுதியொட்டி உள்ள கிராமங்களில், கால்நடைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை முழுவீச்சில் வனக்குழு, கிராம அமைப்புகளுடன் வனத்துறை இணைந்து செயல்பட வேண்டும்' என, தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில், சேலம் மாவட்ட வனப்பாதுகாவலர் வெங்கடேசன், மாவட்ட வன அலுவலர்கள் ஆத்தூர் நாகநாதன், சேலம் சுகிர்தராஜ் கோவில்பிள்ளை, மண்வள பாதுகாப்பு அலுவலர் லோகநாதன், வனக்கோட்ட அலுவலர் தன்ராஜ், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் சிவப்பிரகாசம், கால்நடை மருத்துவர் ராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மஞ்சள் பயிரில் நவீன தொழில்நுட்பம் மூலம் கூடுதல் லாபம் பெற ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஜுலை 18,2011,02:35 IST

ராசிபுரம்: "மஞ்சள் பயிரிடும் விவசாயிகள், நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அதிக லாபம் பெறலாம்' என, வெண்ணந்தூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் தமிழ்ச்செல்வி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:ராசிபுரம் தாலுகா, வெண்ணந்தூர் யூனியனுக்கு உட்பட்ட பகுதிகளில், மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மஞ்சளில் அதிக லாபத்தை பெற நவீன தொழில் நுட்பங்களான சொட்டுநீர் பாசனத்தை அமைத்து, நீர்வழி உரமிட்டு முறையாக கடைபிடிக்க வேண்டும்.அதன் மூலம், மஞ்சளில் கூடுதல் மகசூல் பெறலாம். மேலும், களைகள் கட்டுப்படுத்தப்படுகிறது. பயிர் வளர்ச்சி ஒரே சீராக இருப்பதுடன், குறைந்த அளவு தண்ணீர் கொண்டு அதிக அளவு பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்யலாம். தொடர்ந்து, மண் வளம், நீர்வளம், தட்பவெட்ப நிலை ஆகிய உத்திகளை ஆராய்ந்து, அதற்கேற்ப மஞ்சள் ரகத்தினை தேர்வு செய்து பயிரிட வேண்டும்.

ஹெக்டேருக்கு, 1,500 முதல், 2,000 வரை விதையளவு இருக்க வேண்டும். மஞ்சள் நடவு செய்யும் முன், கார்பன்டைசியம் இரண்டு கிராம், மானோகுரோட்டோபாஸ் இரண்டு மில்லி, ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தயாரிக்கப்பட்ட மருந்து கரைசலில், 15 நிமிடம் வைத்த பின் நடவு செய்ய வேண்டும்.அதற்கு முன் வயலை மூன்று முதல் நான்கு தடவை வரை நன்கு உழவு செய்ய வேண்டும். கடைசி உழவில் ஹெக்டேருக்கு தொழு எரு, 25 டன், வேப்பம் புண்ணாக்கு, 200 கிலோ, யூரியா, 55 கிலோ, 335 சூப்பரும், 30 கிலோ பொட்டாஷ், 30 கிலோ ஃபொரஸ்கல் பேட், 10 கிலோ அசோஸ்பைரில்லம், 10 கிலோ பாஸ்போ பாக்டீரியா என்ற அளவில் இட வேண்டும்.வரிசைக்கு வரிசை, 45 செ.மீ., செடிக்கு செடி, 15 செ.மீ., என்ற அளவில் பார் அமைத்து நடவு செய்ய வேணடும். மேற்குறிப்பிட்ட நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள் அதிக லாபத்தினை பெறலாம். மேலும் விபரங்களுக்கு, உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மா மதிப்பு கூட்டு பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு பரிசு**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,02:19 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் நடந்த அகில இந்திய மாங்கனி கண்காட்சி நிறைவு விழாவில், சிறந்த மா விவசாயிகள் மற்றும் மா மதிப்பு கூட்டு பொருட்களை உற்பத்தியாளர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் மாங்கனி கண்காட்சி நிறைவு விழா நடந்தது.

டி.ஆர்.ஓ., பிரகாசம் தலைமை வகித்தார். எம்.எல்.ஏ.,க்கள் கிருஷ்ணமூர்த்தி (பர்கூர்), மனோரஞ்சிதம் (ஊத்தங்கரை) ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் இணை இயக்குனர் நாச்சியப்பன் வரவேற்றார். சிறந்து அரங்குகள் மற்றும் சிறந்த மா உற்பத்தியாளர்களுக்கு பரிசுகள் வழங்கி டி.ஆர்.ஓ., பிரகாசம் பேசியது:கிருஷ்ணகிரியில் 24 நாட்கள் நடந்த அகில இந்திய மாங்கனி கண்காட்சியை 2 லட்சம் பேர் பார்த்து மகிழ்ந்தனர். கண்காட்சியில் பல்வேறு மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட 22 வகையான மாங்கனிகள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. மேலும் மாங்கனி மற்றும் மதிப்புகூட்டு மா பொருட்கள் காட்சிப்போட்டி நடத்தப்பட்டது. இதில் மாங்கனி ரகங்கள், மா மதிப்பு கூட்டு பொருட்கள், மாங்கூழ், மா உணவு வகைகள் என ஏழு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டது.போட்டிகளில் சிறந்த காட்சி மாங்கனியாக தமிழ்நாடு கிருஷ்ணகிரி மாவட்டம் தங்காடிகுப்பத்தை சேர்ந்த பரந்தாமன் என்ற விவசாயி வைத்திருந்த "மல்லிகா' ரக மாவுக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது.அரசுத்துறையின் சார்பில் சிறந்த அரங்கு அமைத்து அதிக அளவில் மக்களை கவர்ந்த தோட்டக்கலை துறை, கல்வித்துறை, செய்தி மக்கள் தொடர்பு துறை ஆகிய அரங்குக்கு

சிறப்பு பரிசுகளும், வனத்துறைக்கு முதல் பரிசும், மீன்வளத்துறைக்கு இரண்டாம் பரிசும், கால்நடைத்துறைக்கு மூன்றாம் பரிசும், மகளிர் திட்ட அரங்கிற்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படுகிறது.இவ்வாறு பேசினார்.

மாங்கனி மற்றும் மதிப்பு கூட்டு மா பொருட்கள் ஏழு பிரிவு போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் ரகங்களில் சிறந்த காட்சி பொருட்களுக்கு 59 முதல் பரிசும், 49 இரண்டாம் பரிசும், 38 மூன்றாம் பரிசும் சேர்த்த மொத்தம் 146 மா விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

**தரமான பருத்தி விதைகள்பயன்படுத்த வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,02:17 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், தரமான பருத்தி விதைகளை பயன்படுத்தி அதிக லாபம் பெறலாம்' என விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் ஜான் லூர்து சேவியர் தெரிவித்தார்.அவர் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை, போச்சம்பள்ளி,

மத்தூர் பகுதிகளில் விவசாயிகள் ஆடிப்பட்ட விதை பருவத்துக்கு பி.டி., பருத்தி விதைகளை வாங்கும் போது, விதை விற்பனை உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் இருந்து மட்டும் விதைகளை வாங்க வேண்டும்.வாங்கும் விதைகளுக்கு கட்டாயம் ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். அரசு நிர்ணயம் செய்துள்ள விலைக்கு மிகாமல், விதைகளை விவசாயிகள் வாங்க வேண்டும்.தமிழகத்துக்கு பி.டி., பருத்தி விதைகளை ஒதுக்கீடு செய்யாத நிறுவனங்களின் விதைகளை, பிற மாநிலங்களில் வாங்க நேர்ந்தாலும், உரிய விதை விற்பனை ரசீதுகளை கட்டாயம் பெற்று கொள்ள வேண்டும். மேலும், வாங்கும் பி.டி., பருத்தி விதை குவியலுக்குரிய முளைப்பு திறன் பகுப்பாய்வறிக்கையை சரிபார்க்க வேண்டும்.விதைகளின் தரத்தை அறிந்து கொள்ள கிருஷ்ணகிரி மோகன்ராவ் காலனி முதல் குறுக்கு தெருவில் விதை பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் விதை பரிசோதனை நிலையத்தில், 30 ரூபாய் செலுத்தி விதைகளின் தரத்தை அறிந்து பயன்பெறலாம்.

**கறி சந்தைகளில் கட்டட வசதியில்லை : இருப்பு வைக்க முடியாத அவலம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,21:54 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சியிலுள்ள காய்கறி சந்தைகளில் போதிய கட்டட வசதி இல்லாததால், மழைக்காலங்களில் வெளியிடங்களிலிருந்து கொண்டு வரும் பொருட்களை இருப்பு வைக்க முடியாமல் வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது.பொள்ளாச்சியில், தேர்நிலை மார்க்கெட், திரு.வி.க., மார்க்கெட், காந்தி மார்க்கெட் என மூன்று காய்கறி மார்க்கெட்டுகள் உள்ளன.காந்தி

மார்க்கெட்டின் கட்டடங்கள், மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. அதேபோல், தேர்நிலை மார்க்கெட்டின் கட்டடமும் இடிந்து விழத்துவங்கியுள்ளது. திரு.வி.க., மார்க்கெட்டில் பெரும்பாலான கடைகள் ஓலைகளால் வேயப்பட்ட கடைகளாகவே உள்ளன.மார்க்கெட் கட்டடங்கள் மிகவும் பழமையாக இருப்பதால், மழை காலங்களில் கட்டடங்கள் வலுவிழந்து விடுகின்றன. கடைகளிலிருந்து வெளியேறும் காய்கறி கழிவுகள், மார்க்கெட்டின் ஒரு பகுதியில் கொட்டப்படுகிறது.

இவற்றை சரிவர அகற்றப்படாததால், மழைக்காலங்களில் இவை அழுகி கடுமையான துர்நாற்றம் வீசுகிறது.மார்க்கெட்டின் நுழைவு வாயிலில் தேங்கும் மழைநீர் செல்ல போதிய வசதி இல்லை. இதனால், மழை நீர் மண்ணுடன் கலந்து சேறு போல் தேங்குகிறது. மார்க்கெட்டிற்கு வரும் மக்கள் சேற்றில் இறங்கியே மார்க்கெட்டிற்கு வரும் நிலை உள்ளது.கனமழை பெய்யும் போது, தாழ்வாக உள்ள கடைகளுக்குள் மழைநீர் புகுவதால், இருப்பு வைத்துள்ள காய்கறிகள் மழையில் நனைந்து வீணாகும் நிலை ஏற்படுகிறது. மார்க்கெட்டில் போதிய கட்டட வசதி இல்லாததால், மழை காலங்களில் பொருட்களை இருப்பு வைக்க முடியாமல் வியாபாரிகள் தவிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் கூறியதாவது: சரக்குகளை இருப்பு வைக்க போதிய வசதி இல்லாததால், தேவையான சரக்குகள் மட்டும் வெளியிடங்களிலிருந்து கொண்டு வரப்படுகிறது. மழை காலங்களில் மட்டும் தினமும் கொண்டு வரப்படும் சரக்குகளை அன்றே விற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. நகராட்சி சார்பில் புதிய மார்க்கெட் கட்ட நடவடிக்கை மேற்கொண்டால், வியாபாரிகளுக்கு சிரமம் இருக்காது, என்றனர்.

**கால்நடைக்கு கோமாரி நோய் தடுப்பூசி: டாக்டர் அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,21:45 IST

மேட்டுப்பாளையம் : காரமடை ஒன்றியத்தில் மாடுகளுக்கு "கோமாரி நோய் தடுப்பூசி' போடும் முகாம் நடக்கிறது.இரும்பறை கால்நடை மருத்துவமனை டாக்டர் ஜெகன்மோகன் அறிக்கை: கால்நடைகளுக்கு "கோமாரி நோய்' தாக்கினால் கால் மற்றும் வாய் பகுதியில் புண் ஏற்படும். பசுமாடுக்கு பால் உற்பத்தி குறையும், சினை பிடிப்பதும் தடைபடும். எருதுகளுக்கு உடல்திறன் குறையும், இளங்கன்றுகள் இறக்க நேரிடும். இதனால், கால்நடை வளர்ப்போருக்கு ஒட்டு மொத்த பொருளாதார இழப்பு ஏற்படும். பொதுவாக குளிர் மற்றும் பனிக்காலத்தில் இந்நோய் தாக்கம் அதிகம் காணப்படும்.

இது ஒரு வகை "வைரஸ் கிருமி' என்பதால், மற்ற கால்நடைகளுக்கும் எளிதில் பரவும். நோய் தாக்கிய கால்நடைகள் சரியான தீவனம் உட்கொள்ளாது, வாயிலிருந்து நுரை கலந்த உமிழ் நீர் நூல் போல் ஒழுகிக் கொண்டே இருக்கும். சினை மாடுகளுக்கு கருச்சிதைவும் ஏற்படும். இந்நோய் தாக்கிய அறிகுறி காணப்பட்டால் உடனடியாக கால்நடை டாக்டரை அணுக வேண்டும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. மற்ற கால்நடைகளில் இருந்து தனிமைப்படுத்தி வைக்க வேண்டும். மாட்டுக் கொட்டகையைச் சுற்றி சுண்ணாம்புத் தூள் தூவ வேண்டும். இவ்வாறு செய்தால் நோய் பரவாமல் தடுக்க முடியும். கால்நடைகளுக்கு இந்நோய் வராமல் தடுக்க, ஆண்டுதோறும் ஒரே நேரத்தில் தடுப்பூசி போடப்படுகிறது.

இந்தாண்டுக்கான தடுப்பூசி முகாம், கடந்த 8ம் தேதி முதல் துவங்கி காரமடை ஒன்றியம் முழுவதும் நடக்கிறது. இலுப்பநத்தம் ஊராட்சியில் உள்ள கிராமங்களில் இன்று துவங்கி 21ம் தேதி வரையும், சின்னக்கள்ளிப்பட்டி ஊராட்சியில் உள்ள கிராமங்களில் 22 முதல் 24ம் தேதி வரையும், முடுதுறை ஊராட்சியில் 25 முதல் 28ம் தேதி வரையும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கும். காரமடை ஒன்றியத்தில் உள்ள மற்ற கிராமங்களிலும் தடுப்பூசி போடும் முகாம்கள் நடக்கின்றன. முகாமில், விவசாயிகள் பங்கேற்று கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு தற்காத்துக் கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மழையால் உயரத் துவங்கியது கொப்பரை விலை**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,01:10 IST

பொள்ளாச்சி : மழையால் கொப்பரை உற்பத்தி பாதித்ததால், வெளி மார்க்கெட்டில் விலை உயரத் துவங்கியுள்ளது.
காங்கேயம் மார்க்கெட்டில், கடந்த 9ம் தேதி நிலவரப் படி, கொப்பரை கிலோவுக்கு 47-50 ரூபாய் கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு, 1,100 ரூபாய் முதல் 1,150 ரூபாய் வரையும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு, 75 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள் பறித்து உரித்து வைத்திருக்கும் தேங்காய் டன்னுக்கு, 12 ஆயிரத்து 500 முதல் 13 ஆயிரத்து 500 வரை, பொள்ளாச்சி, உடுமலைப் பகுதிகளில் இருந்து சென்னை உட்பட பிற பகுதிகளுக்கு, உணவுத் தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய் டன்னுக்கு 12 ஆயிரம், தென்னந்தோப்புகளில் விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 7 ரூபாய், வியாபாரிகள் பறித்துக் கொள்ள, தேங்காய்க்கு 6 ரூபாயும் விலை கிடைத்தது.

நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு, 54 - 55 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,200, தேங்காய் பவுடர் கிலோவுக்கு 90 ரூபாய், விவசாயிகள் சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு, 14 ஆயிரம் முதல் 14 ஆயிரத்து 500 ரூபாய் வரை கிடைத்தது. விவசாயிகள் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய்க்கு 8.50 ரூபாய், வியாபாரிகள் சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள, தேங்காய்க்கு 8 ரூபாய் வழங்கப்பட்டது. பொள்ளாச்சி, உடுமலைப் பகுதிகளில் இருந்து சென்னை உட்பட பிற பகுதிகளுக்கு உணவுத் தேவைக்கு அனுப்பப்படும் தேங்காய் டன்னுக்கு 13 ஆயிரத்து 500 வழங்கப்பட்டது.

கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், ""பருவமழை மீண்டும் தீவிரமடைந்துள்ளதால், கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது; வெளிமார்க்கெட்டில் கொப்பரைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை உயர்ந்து வருகிறது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை கிலோவுக்கு ஐந்து ரூபாய் உயர்ந்துள்ளது. தேங்காய் எண்ணெயில் கலப்படத்தை தடுத்தால், தேங்காய் சார்ந்த பொருட்களின் விலை மேலும் உயரும். தேங்காய் சீசன் நிறைவடையும் நிலையில், விலை சரிவை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றனர்.

**நீலகிரி விவசாயிகளுக்கு உரம் ஒதுக்க மனு**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,01:27 IST

ஊட்டி : "நீலகிரி விவசாயிகளுக்கு 512 மெட்ரிக் டன் "டிஏபி' உரம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்,' என வலியுறுத்தப்பட்டுள்ளது.நீலகிரி மாவட்ட உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாநில வேளாண்துறை அமைச்சருக்கு அனுப்பியுள்ள மனு:நீலகிரி மாவட்ட வேளாண் பயிர்களான உருளைக்கிழங்கு, மலை காய்கறிகள், தேயிலை ஆகியவற்றுக்கு கலப்பு மற்றும் தனி உரமாகவும், பயிர்களுக்கு மேல் மற்றும் அடி உரமாகவும் "டிஏபி' உரம் இடப்படுகிறது. இதனால் மகசூல் பெருகுகிறது. டிஏபி உரம் வினியோகம் வெறும் 20 டன்னாக மட்டும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது மிக குறைவாக உள்ளது.

இரண்டாம் போக பயிர்களுக்கு ஜூன் மாதத்திற்கு தேவையான 145 மெட்ரிக் டன்னுக்கு, வெறும் 20 டன் மட்டும் அனுமதித்துள்ளது விவசாயிகளை பாதிக்க செய்துள்ளது. எனவே, மகசூல் பாதிப்பை கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் அரசு ஒதுக்கி வரும் டிஏபி உரத்தை ஒதுக்கீடு செய்து உதவ வேண்டும். இரண்டாம் போகம் பயிர் சாகுபடிக்கு உரம் தேவையாக இருப்பதாலும், மழை காரணமாக போக்குவரத்து இடையூறு ஏற்பட வாய்ப்பு இருப்பதாலும் முன்னெச்சரிக்கை

நடவடிக்கையாக, 512 மெட்ரிக் டன் டிஏபி உரம் உடனடியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும். இவ்வாறு, கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

### பட்டுப்புழு வளர்ப்புவிழிப்புணர்வு கருத்தரங்கு

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,01:04 IST

தா.பேட்டை: தா.பேட்டை யூனியன் அஞ்சலம் பஞ்சாயத்து நீலியாம்பட்டி கிராமத்தில் ஒருங்கிணைந்த மல்பரி சாகுபடியில் பட்டு புழு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கம் யூனியன் துவக்கப்பள்ளி வளாகத்தில் நடந்தது.கருத்தரங்கிற்கு முசிறி தொழில்நுட்ப சேவை மைய உதவி ஆய்வாளர் கண்ணன் வரவேற்றார். பஞ்சாயத்து துணைத்தலைவர் பக்ருதீன், உறுப்பினர்கள் தங்கராசு, கனகராசு, சின்னமணி, மகேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பட்டுவளர்ச்சித் துறை மண்டல துணை இயக்குனர் (பொ) கோபால்சாமி தலைமை வகித்தார். சேலம் மண்டல பட்டு ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர் ராஜ்குமார் பங்கேற்று, பட்டு வளர்ச்சியில் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய நவீன தொழில் நுட்பங்களை விரிவாக எடுத்துக்கூறி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார்.நிகழ்ச்சியில் பட்டு வளர்ச்சி துறை அலுவலர்கள் மாரியப்பன், ராஜ்பாபு, ராஜாமுத்து, சுப்பிரமணியன், சுற்றுப்புற விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.ஏவூர் சரக இளநிலை ஆய்வாளர் பசுபதி நன்றி கூறினார்.

### இயற்கை உரத்தை பயன்படுத்தி காய்கறி உற்பத்தி

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,02:09 IST

மோகனூர்: திடக்கழிவு மேலாண் திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட இயற்கை உரத்தை கொண்டு காய்கறி, கீரை, பழவகைககள் உற்பத்தி செய்து, கடந்த இரண்டு ஆண்டில், 30 ஆயிரம் ரூபாய் வருவாய் ஈட்டி, மோகனூர் டவுன் பஞ்சாயத்து நிர்வாகம் சாதனை படைத்துள்ளது.நாமக்கல் மாவட்டத்தில் உள்ள, 5 நகராட்சி, 19 டவுன் பஞ்சாயத்து மற்றும், 331 கிராம பஞ்சாயத்துகளில் திடக்கழிவு மேலாண் திட்டம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் செயல்படுத்தப்பட்டது. அதன்படி, அந்தந்த நகராட்சி, டவுன் மற்றும் கிராம பஞ்சாயத்துகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பைகளாக தரம் பிரிக்கப்பட்டது.அவ்வாறு தரம் பிரிக்கப்பட்ட மக்கும் குப்பைகளை கொண்டு இயற்கை உரம் தயாரித்து, அதை விவசாயிகளுக்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்து, அதன் மூலம் சம்மந்தப்பட்ட பஞ்சாயத்து நிர்வாகத்தினர் கணிசமான தொகையை வருவாய் பெறமுடியும். இந்த திட்டத்தை, ஒரு சில பஞ்சாயத்து நிர்வாகத்தினர்

மட்டுமே முறையாக பின்பற்றி இயற்கை உரம் தயாரித்து வருகின்றனர்.

அதில், மோகனூர் டவுன் பஞ்சாயத்து நிர்வாகத்தினர், இயற்கை உரத்தை தயாரித்து விற்பனை செய்வதுடன், சீஸனுக்கு ஏற்றவாறு காய்கறிகள், பழ வகைககள், கீரை வகைகள் உற்பத்தி செய்து, கடந்த இரண்டு ஆண்டுகளில், 30 ஆயிரம் ரூபாய் வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளனர்.மோகனூர் டவுன் பஞ்சாயத்தில், 15 வார்டுகள் உள்ளன. அங்கு வசிக்கும் மக்களிடம், பஞ்சாயத்து பணியாளர்கள் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிக்கின்றனர். அவ்வாறு சேகரித்த குப்பைகளை, மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தரம் பிரிக்கின்றனர்.தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை, திடக்கழிவு மேலாண் திட்டத்துக்காக மணியங்காளிப்பட்டியில் உள்ள மூன்று ஏக்கர் நிலத்தில் கொண்டு குவிக்கின்றனர். அங்கு ஈ.எம்.கரைசலை தெளித்து குப்பைகளை மக்க வைக்கின்றனர். குறிப்பிட்ட நாட்களுக்கு பின் மக்கிய குப்பைகள் உரமாக மாறுகிறது.

அதை கிலோ, 2 ரூபாய்க்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்கின்றனர். கத்தரி, வெண்டங்காய், முருங்கை, தக்காளி போன்ற காய்கறிகளும், மல்லிகை பூ, அரளி, செவ்வரளி வகைகளும், மாதுளை பழவகைகளும், சீசன் காய்கறிகளும் பயிர் செய்து, மோகனூர் உழவர் சந்தையில் விற்பனை செய்து பஞ்சாயத்து நிர்வாகத்துக்கு வருவாய் சேர்க்கின்றனர்.தற்போது, மிளகாய், தக்காளி நாற்றுகள் பதியன் போடப்பட்டுள்ளது. அதற்காக தினமும் ஆறு பேர் ஷிப்ட் முறையில் பணியில் ஈடுபட்டுள்ளனர். இயற்கை உரம், காய்கறி, கீரை வகைகள் மூலம் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம், 2,000 ரூபாய் கிடைக்கிறது.திடக்கழிவு மேலாண் திட்டத்தை செயல்படுத்தியதன் மூலம், மற்ற நகராட்சி, டவுன் மற்றும் கிராம பஞ்சாயத்துகளுக்கு, மோகனூர் டவுன் பஞ்சாயத்து நிர்வாகம் ஒரு முன்னோடியாக திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**பயிர் கடனாக ரூ.12 ஆயிரம் வழங்கிட கலெக்டரிடம் விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,23:46 IST

விழுப்புரம் : விழுப்புரத்தில் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் கலெக்டர் மணிமேகலை தலைமையில் நடந்தது.கூட்டத்தில் டி.ஆர்.ஓ., வெங்கடாஜலம், கூட்டுறவு சங்க மண்டல இணை பதிவாளர் மலர்விழி, கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ரேணுகாம்பாள், வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் சக்கரவர்த்தி, மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் (பொறுப்பு) கிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். கடந்த மாதம் நடந்த குறைகேட்பு கூட்டத்தில் பெற்ற 147 மனுக்களில் 95க்கு பதிலளிக்கப்பட்டது. நீர்வள நில வளத் திட்டத்தில் நன்செய் நிலங்களில் பயிர் செய்யப்படுகிறது. புன்செய் நிலத்திலும்

பயிரிட அனுமதிக்க வேண்டும்.வானூர் - சிறுவாலை சாலை மோசமாக உள்ளது. ஆவணிப்பூர் அரசு மேல் நிலைப் பள்ளி மாணவர்கள் வசதிக்காக பஸ் நேரத்தை மாற்ற வேண்டும்.திருக்கோவிலூர் அடுத்த அருளவாடி பகுதியில் மணல் கொள்ளையால் நிலத்தடி நீர் பாதிக்கிறது. கொங்கம்பட்டு பாலத்தை விரைவில் கட்டி முடிக்க வேண்டும். கண்டாச்சிபுரம் பகுதியில் வங்கிகளில் பயிர் கடன் 10 ஆயிரம் ரூபாய்மட்டும் தருகின்றனர். அங்கு12 ஆயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட வேண்டும் போன்ற கோரிக்கைகள் குறித்து விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பேசினர்.

**விதை கிராமத் திட்டத்தில் விவசாயிகள் கலந்தாய்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,23:43 IST

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூர் பி.டி.ஓ., அலுவலகத்தில் விதை கிராமத் திட்டத்தில் விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் தேவநாதன் தலைமை தாங்கினார். உதவி வேளாண் அலுவலர்கள் பரணி, ரவிச்சந்திரன், பெரியசாமி, ஹரிகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். துணை வேளாண் அலுவலர் பிரசன்னராஜ் வரவேற்றார்.எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ராதாகிருஷ்ணன், கரும்பு ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் ஜெயச்சந்திரன் பயிற்சியளித் தனர். எம்.எல்.ஏ., வெங்கடேசன் கலந்து கொண்டு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.அ.தி.மு.க., நகர செயலாளர் கேசவன், மாவட்ட ஜெ.,பேரவை துணை செயலாளர் சரவணக்குமார், தே.மு.தி.க., ஒன்றிய செயலாளர் ராமச்சந்திரன், நகர செயலாளர் அசேன்ஷரீப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பாசன நீர் சேகரிப்பு விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2011,23:42 IST

விழுப்புரம் : தியாகதுருகம் வட்டம் திம்மலை, பெரியமாம்பட்டு கிராமங்களில் மண் மற்றும் பாசன நீர் சேகரிப்பு விழிப்புணர்வு முகாம் நடந்தது.விழுப்புரம் மண் பரிசோதனை நிலையம் சார்பில் நடந்த முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார். மண், பாசன நீர் ஆய்வின் முக்கியத்துவம் மற்றும் மாதிரிகள் எடுக்கும் முறைகள் குறித்து வேளாண்மை அலுவலர்கள் கங்கா கவுரி, அனுசுயா விளக்கினர்.தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் குறித்து உதவி வேளாண்மை அலுவலர் ரவிக்குமார் பேசினார். முகாமில் கலந்து கொண்ட விவசாயிகள்

தங்கள் நிலங்களில் இருந்து மண் மற்றும் நீர் மாதிரிகள் எடுத்து வந்தனர். உதவி விதை அலுவலர் தேவராசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *தென் மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி 14 சதவீதம் சரிந்தது*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*தென் மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி, மே மாதத்தில் 14 சதவீதம் சரிந்து 64.30 லட்சம் கிலோவாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 74.70 லட்சம் கிலோவாக இருந்தது. கென்யா போன்ற கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களின் கடும் போட்டி காரணமாக தென்னிந்தியாவின் தேயிலை ஏற்றுமதி குறைந்துள்ளது என தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.*
*எகிப்து நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பு காரணமாக கென்யா போன்ற நாடுகள் பிற நாடுகளை இலக்காகக் கொண்டு செயல்பட தொடங்கியுள்ளன. மேலும் வட ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு ஆசிய நாடுகளில் தென்னிந்திய தேயிலைக்கான தேவை குறைந்துள்ளது. இதனாலும் நமது ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தென்னிந்தியாவின் தேயிலை உற்பத்தி 3 சதவீதம் சரிவடைந்துள்ளது. மே மாதத்தில் 2.44 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 2.52 கோடி கிலோவாக இருந்தது. பருவநிலை சாதகமாக இல்லாததால் உற்பத்தி சரிவு கண்டுள்ளதாக உபாசி அமைப்பின் விளைபொருள் பிரிவின் தலைவர் ஆர்.சஞ்சித் கூறினார்.*